*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*12(2), 2019*

# மேலைத்தேய மெய்யியல் பாரம்பரியத்திற்கான 'சோ.ஃ.பிஸவாதிகளின் பங்களிப்பு': ஓர் மெய்யியல் பார்வை

**புலேந்திரன் நேசன்**
முதுதத்துவமாணி ஆய்வாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

Correspondence: pnesan92@gmail.com

**கட்டுரைச் சுருக்கம்**

இவ் ஆய்வானது கிரேக்கத்தின் முக்கிய சிந்தனைச் செயற்பாட்டாளர்களான சோபிஸவாதிகளினால் மேலைத்தேய மெய்யியல் அறிவுப் பாரம்பரியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புக்கள் தொடர்பாக ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டு அமைகின்றது. ஆதி கிரேக்கத்திலே தோன்றிய மேலைத்தேய மெய்யியல் சிந்தனைகள் பிரபஞ்சவியல் (Cosmology) பற்றிய அறிவாராய்ச்சியினை மேற்கொள்ள, அதனைத்தொடர்ந்து உருவான சோபிஸ சிந்தனையானது 'மனிதனை' முக்கியப்படுத்தியமையினால் இவர்களது சிந்தனைகளைப் புரிந்து கொள்வதிலும், ஏற்றுக்கொள்வதிலும் காணப்பட்ட சிக்கல்தன்மை இவ் ஆய்வின் பிரச்சினையாக காணப்படுகின்றது. உண்மை அறிவினை புலக்காட்சி அனுபவமூடாக ஏற்றுக்கொண்டனர், மனிதனை மையப்படுத்தியவகையிலான கல்வி, அறிவுப் பாரம்பரியத்தை யதார்த்த பூர்வமாக மேற்கொண்டனர் போன்றன இவ் ஆய்வின் கருதுகோள்களாகக் காணப்படுகின்றன. இவ் ஆய்வுக்கான தரவுகள் பிரதானமாக இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கைகள், நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றினூடாக சேகரிக்கப்பட்டதோடு, விபரணப் பகுப்பாய்வு, விமர்சன ஆய்வு முறை போன்ற ஆய்வு முறைமைகளைப் பயன்படுத்துகின்றது. சோபிஸ்டுகளின் செயற்பாட்டினால் புதியதோர் சிந்தனை வளர்ச்சிப் போக்கானது மெய்யியல் வளர்ச்சியில் ஏற்பட்டது. இதுவரை காலமும் பிரபஞ்சவியல் ஆய்வினை முக்கியப்படுத்திய கிரேக்க மெய்யியலாளர்கள் அதிலிருந்து விடுபட்ட மனிதனை மையப்படுத்திய ஆய்வுகளை முன்னெடுக்கவும், பிற்காலத்தில் சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் போன்று பலரும் தமது ஆய்வுகளில் அறிவார்வத்தினை வெளிப்படுத்தவும், இன்றுவரையும் வாதப்பிரதிவாதங்களுடன், பகுத்தறிவினை நடைமுறை ரீதியில் பயன்படுத்தவும் சோபிஸ்டுகளின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

**பிரதான சொற்கள்:** அறிவார்வம், சோபிஸ்ட், மெய்யியல், மனிதன்

## 1. அறிமுகம்.

அறிவார்வம் (Love of wisdom) எனப்படும் மெய்யியலானது ஆதி கிரேக்கத்திலும், இந்தியாவிலும் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்து தோற்றம்பெற்றது. "அறிய வேண்டுமென்று மனிதனின் பேரவாதான் மெய்யிலின் தோற்றத்திற்கு காரணமாக இருந்துள்ளது" காலவோட்டத்தில் நிகழ்ந்த சிந்தனை நிர்மாணங்கள் காரணமாக மெய்யியல் ஒரு ஒழுங்கு முறையான அறிவு முறையாக வடிவம் பெற்றது. விஞ்ஞானங்களிலிருந்து மெய்யியல் வேறுபட்டது. ஒரு குறித்த பொருள் பற்றி மட்டுமே ஏனைய விஞ்ஞானங்கள் தமது அவதானத்தை வெளிப்படுத்தும் போது மெய்யியல் எல்லா விடயங்களிலும் தனது அக்கறையை வெளிப்படுத்தி வந்திருப்பதை மெய்யியல் வரலாற்றினூடாக அறியமுடிகின்றது.

மேலைத்தேய மெய்யியல் வரலாற்றின் ஆரம்பம் ஆதி கிரேக்க மெய்யியலாகும். இக்காலப்பகுதியில் பிரபஞ்சம், உலகத் தோற்றம் தொடர்பான ஆராய்ச்சிகள் முக்கியம் பெற்றது. உண்மையில், ஆதி கிரேக்க பிரபஞ்சவியல்வாதிகள் அறிவியல் ரீதியான தமது சிந்தனைகளின் விளக்கத்தை அடிப்படைக் கட்டமைப்பாக முன்வைத்தனர். இயற்கை கடந்த ஆற்றல்கள் புராணங்களின்

தொடர்பின்றி இயற்கைக் காரணிகளையும் தொடர்புகளையும் பயன்படுத்தி இவ்விளக்கத்தை அவர்கள் உருவாக்கினர். கிரேக்கரின் இந்த அறிவுத் தேடல் முறையானது தனித்துவமானது, பிரத்தியேகமானது. தொடர்ந்து கி.மு. 5ம் 4ம் நூற்றாண்டு காலப்பகுதியில் சோ∴பிஸ்டுகள் (Sophists) என்ற பெயர் கொண்ட ஒரு இயக்கம் மெய்யியலை ஆக்கிரமித்திருந்தது. (Sophists, any of certain Greek lecturers, writers, and teachers in the 5th and 4th centuries bce) அதாவது, மெய்யியலில் குறித்தளவு தாக்கம் செலுத்தக்கூடியதொரு பிரிவினராக அவர்கள் செயற்பட்டனர். இவ்விடயம் பற்றி நேர்செஸ்யன்ற்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்;

கி.மு 5ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் தொன்மைக் கிரேக்கத்தின் அரசியல், சட்டத்துறை மற்றும் மனிதர் பற்றிய கருத்துக்கள் ரீதியாக ஏற்பட்ட பொதுவான ஆர்வம் சோ∴பிஸ்டுகளின் செயற்பாடுகளோடு தொடர்பானவை. சோக்கிரட்டீஸுக்கு சற்று முந்திய காலப்பிரிவை சோ∴பிஸ்டுகளின் யுகம் எனலாம் (Nersesyants, V.S., 1986; p.86).

விஞ்ஞானமும் மெய்யியலும் உயர்ந்து விளங்கிய அக்காலத்தில் சோ∴பிஸவாதிகள் தங்களை அறிவாளிகள் என்று அழைத்துக்கொண்டனர். இவர்களுடைய கருத்துக்களில் மனித விழுமியம் சார்ந்த துறைகள் நிராகரிக்கப்படும் ஒரு அபாயம் காணப்பட்டது. வாழ்க்கை உண்மை பொய் என்பவற்றிற்கு மனிதநேயத்தை அளவு கோலாகக் கொண்டனர். இவர்களது அறிவாராட்சியியல் தொடர்பான சிந்தனைகளில் மனிதனுக்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்பட்டு அவனே எல்லாவற்றினதும் அளவுகோல் எனப்பட்டான். சோ∴பிஸவாதிகளுக்கு என பல சிறப்பம்சங்கள் மெய்யியல் வரலாற்றில் காணப்படுவதோடு இவர்களிடையே பிரிவுகள் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இது பற்றி சோ. கிருஸ்ணராஜா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்;

"கிரீஸ் நாட்டில் சிறப்பாக ஏதேன்ஸ் நகரத்தில் ஒரு புதிய இயக்கம் தோன்றிற்று. அவ்வியக்கம் தனிநிலையையும் (Individualism) சுதந்திரத்தையும் (Freedom) வலியுறுத்தியது. இவ்வியக்கத்தைத் தோற்றிப் பரவச் செய்தவர்கள் சோபிஸ்டுகள் என அழைக்கப்பட்டனர். ஊர்ஊராகச் சென்று ஊதியம் பெற்றுக்கொண்டு இளைஞர்களுக்குச் சிந்தனை முறையையும், பேச்சுக்கலையையும் கற்பித்து அவர்களை அரசியலில் வெற்றிகரமான வாழ்க்கைக்குப் பக்குவப்படுத்தினர். புறச்சார்புள்ள உண்மை (Objective truth) எதுவுமில்லை என்பதே அவர்கள் கருத்து" (கிருஸ்ணராஜா, சோ., 2018; ப.4).

சோ∴பிஸ்ட் (Sophist) என்ற சொல் கிரேக்க காலக் கவிதைகளிலும் கூற்றுக்கிலும் பயன்பட்ட Sophos என்ற மொழியின் திரிபாகும். சோ∴பிஸ்ட் என்றால் அறிவாளி என்று பொருள் அக்கால கிரேக்கத்தில் பிரபுக்களின் ஆட்சிகள் வீழ்ச்சியடைந்து ஜனநாயகப்பண்புகள் மெல்லத் தோன்றி பழைய மரபு சமயம் ஒழுங்குகளும் சமூக ஒழுக்கம் முதலியவற்றில் நம்பிக்கையீனம் பரவி புராதன அரசியல் ஒழுங்குகளும் சீர்குலைந்து புதிய அரசியல் நிலைமையில் புது இலட்சியங்களும் புத்தூக்கங்களும் வந்து சேர்ந்தன. பெயர் புகழ் தலைமைப்பண்பு என்பன மக்களின் நோக்கங்களாயின. அரசியல் துறையில் வெற்றி பெறுவதற்கான வழிகள் தேடப்பட்டன. பேச்சாற்றலும் விவாதத்திறனும் எதிரியோடு போட்டியிட்டு வெல்ல அவசியமாயின. இவ்வாறான விடையங்களை கற்பிக்கக் கூடிய சிறந்த ஆசிரியர்களை அக்கால இளைஞர்கள் தேடினர். இவ்வாறான தேடலின் போது தோன்றிய ஆசிரியர் கூட்டமே சோ∴பிஸ்டுகளாவர். இவ்விடயம் குறித்து சாமுவல் ஈனொச் ஸ்ரம்ப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்;

"பண்டைய காலத்தில் கல்வி, குடும்பப் பாரம்பரியத்தோடு தொடர்புபட்டிருந்தது. சமயம், இலக்கணம் போன்ற துறைகளில் கோட்பாட்டுப் பயிற்சிகளைச் சிறப்பாகத் தரக்கூடிய பாடத்துறைகள் எதுவும் இருக்கவில்லை. இதுதான் ஏதென்ஸில் அப்போது நிலவிய கலாசாரச் சூன்யநிலை. இதற்குள்தான் சோ∴பிஸ்டுகள் பிரவேசித்தனர்" (Samual Enoch Stumpf, 1994; p.30).

அறிவாளிகள் என்று தங்களை கூறிக்கொண்டாலும் காலப்போக்கில் பேச்சுக்கலையை மட்டுமே இவர்களால் கற்பிக்கக் கூடியதாக இருந்ததனால் அறிவாளிகள் என்பது இகழ்ச்சிப் பெயராகவும் நோக்கப்பட்டதோடு; நாடோடி ஆசிரியர்களாகத் திரிந்து அரசியல் தந்திரத்தையும் விவாதிக்கும் திறனையும் தேடிச்சென்று கற்பித்ததனால் இவர்களுடைய ஞானமும் ஒழுக்கமும் தரமற்றது என இகழவும்

வழியேற்பட்டது. ஆனாலும் சோபிஸ்டுகள் இன்றைய பேராசிரியார்கள் வகிக்கும் அறிவியல் சமூகப்பங்கை அன்று வகித்தார்கள் என்ற கருத்துநிலையும் காணப்படுகின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்

சோக்கிரட்டீஸின் மெய்யியல் சிந்தனைகளுக்கு முன்னர் கிரேக்கத்தின் முக்கிய சிந்தனைச் செயற்பாட்டாளர்களாக விளங்கிய சோ.்.பிஸவாதிகளினால் மெய்யியல் அறிவுப் பாரம்பரியத்திற்கு மனிதனை முக்கியப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புக்கள் தொடர்பாக ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டு அமைகின்றது.

## 3. ஆய்வுப் பிரச்சினை

ஆதி கிரேக்கத்திலே தோன்றிய மேலைத்தேய மெய்யியல் சிந்தனைகள் பிரபஞ்சவியல் (Cosmology) பற்றிய அறிவாராய்ச்சியினை மேற்கொள்ள, அதனைத்தொடர்ந்து உருவான சோ.்.பிஸ சிந்தனையானது 'மனிதனை' முக்கியப்படுத்தியமையினால் இவர்களது சிந்தனைகளைப் புரிந்து கொள்வதிலும், ஏற்றுக்கொள்வதிலும் காணப்பட்ட சிக்கல்தன்மை இவ் ஆய்வின் பிரச்சினையாக காணப்படுகின்றது.

## 4. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வுக்கான தரவுகள் பிரதானமாக இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான சோபிஸ்ட் தொடர்பாக வெளிவந்த நூல்கள், இவ்விடயம் சார்ந்து முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கைகள், நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றினூடாக சேகரிக்கப்பட்டதோடு, விபரணப் பகுப்பாய்வு, விமர்சன ஆய்வு முறை போன்ற ஆய்வு முறைமைகளைப் பயன்படுத்துகின்றது.

## 5. பகுப்பாய்வு

உலகின் பல்வேறு நாடுகளின் மரபுகள், கலாசாரங்கள் மற்றும் பழக்கவழக்கங்களுக்கும் உரித்துடையவர்களாக சோ.்.பிஸ்டுகள் காணப்பட்டனர். அதனால் வெவ்வேறு கலாசாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட தகவல் களஞ்சியங்களாகவும் அவர்கள் காணப்பட்டனர். சோ.்.பிஸ்ட் என்ற இவ் ஆசிரியர் கூட்டத்தில் மிகவும் பிரபலமானவராக புரொட்டகோரஸ் (Protagoras கி.மு *480 – 410)* காணப்பட்டார் ஏனையோர்களாக ஜோர்ஜியஸ், புரெடிகஸ், ஹிப்பியஸ் ஆகியோரை குறிப்பிட முடியும். அதேவேளை அன்டிபோன் (Antiphon) லைகோபெறோன் (Licopheron) தரஸிமெஸ் (Tharasy mechus) ஹளிகஸ் (Callichels) கிரிடியஸ் (Critias) அல்சிடமஸ் (Alcidamas) உத்திடமாஸ் (Eutiamus) போன்றோர். பிரபலமற்றவர்களாயினும் புலமையாளர்களாகக் காணப்பட்டனர். சோ.்.பிஸ்டுகளில் இரண்டு பிரதான எழுத்தாளர்களும் இருந்துள்ளனர். இவர்களின் பெயர் விபரம் சரியாகக் குறிப்பிடப்படாவிடினும் அவர்களால் எழுதப்பட்ட நூல்களாக லாம்விழுச்சி (Lam Villchi) இரட்டை விவாதம் (Douple Argument) என்பன கி.மு 4ம் நூற்றாண்டுகளில் பிரபலமாக விளங்கின. இவர்களில் சிலர் ஆசிரியர்களாக இல்லாமல் கடவுள் மற்றும் அரசியல் பாடல்களைப் பாடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். சோ.்.பிஸ்டுகள் தமக்கென ஓர் தனித்தன்மை வாய்ந்த மெய்யியல் பாணியை வைத்திருந்தனர்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் தத்தமது அறிவின் மூலம் ஒரு சமூகம் தன்னை ஒரு ஒழுங்கில் வைத்திருப்பதற்குத் தேவையான எந்த உண்மைகளைப் பின்பற்றுவது அல்லது தவிர்த்துக் கொள்வது என்பது பற்றிய ஐயவாதத்தை மக்களிடையே அவர்கள் தோற்றுவித்தனர். மேலும், தங்களது கலாசாரம் வெறும் செயற்கையான விதிகளிலா அல்லது இயற்கையான விதிகளிலா அமைக்கப்பட்டுள்ளது என்ற கேள்வியைக் கேட்பதற்கும் ஏதேனிய மக்கள் தூண்டப்பட்டனர். தமது சமயம் மற்றும் ஒழுக்க விதிகள் பாரம்பரியமானவையா மாற்றப்படக்கூடியவையா அல்லது இயற்கையானவையா என்று மக்கள் மத்தியில் சிந்தனை விழிப்புணர்வுக்கு சோ.்.பிஸ்டுகள் வழிவகுத்தனர்.

மேலும், அறிவு எவ்வாறு பெறப்படுகின்றது. மனிதர்கள் எவ்வாறு தமது நடத்தையை ஒழுங்கு செய்து கொள்கிறார்கள் போன்ற மனித இயல்பைப் பற்றிய கலந்துரையாடலுக்கும் சோ.்.பிஸ்டுகள் சந்தர்ப்பங்களை வழங்கினர். அடிப்படையில் சோ.்.பிஸ்டுகள் நடைமுறை வாதிகள். சோபிஸ்ட்டுகள் வெவ்வேறு விதமான வார்த்தை ஜாலங்களையும் நுண்ணிய அளவையியல் போலிகளையும் பயன்படுத்தி

எதிரிகளைச் சாடுவதில் தேர்ச்சி பெற்றிருந்தனர். சோ∴பிஸ பேச்சலங்காரக் கலையும் வாதிடும் கலையும் இருமுனை வாளைப் போன்றது.

### 5.1 'மனிதன்' பற்றிய சோ∴பிஸ சிந்தனை

சோ∴பிஸ்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சிந்தனையாளர்கள் பிரபஞ்சவியல் (Cosmology) பற்றியே தமது கருத்துகளையும், சிந்தனைகளையும் கொண்டிருந்தனர். ஆனால் சோ∴பிஸ்டுகளின் தோற்றம் அப்பார்வையை மனிதனை நோக்கித் திருப்பியது. மனிதனை எல்லாவற்றையும்விட முதன்மைப்படுத்திய இவர்கள் மனிதனையே அனைத்திற்கும் அளவுகோலாகக் கொண்டனர். இதில் புரொட்டகோரஸின் "உள்ளதன் உண்மைக்கும் இல்லாததன் இன்மைக்கும் எதற்கும் மனிதனே அளவுகோல்" என்ற மகாவாக்கியம் முக்கியமானதாகும். அனேகமானோர் புரொட்டகோரஸ் அளவுகோல் என்று கருதிய மனிதன் தனி மனிதனே என்றனர். ஆனால் சோ∴பிஸ்டுகளின் அர்த்தத்தில் மனித அளவுகோல் சிந்தனை "நான் கண்டது எனக்கு உண்மை, நீ கண்டது உனக்கு உண்மை" என்ற கருத்தில் அமைந்ததாகும். அதாவது தனி மனித அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டதோடு: அனுபவ அறிவை நோக்கி மனிதப் புலன்கள் திருப்பப்பட்டன இந்த வகையிலேயே தமக்கு முன்னர் நிலவிய உலகின் அறிவுப்பார்வையை மனிதனை நோக்கித் திருப்பிய பாரிய பெருமை சோ∴பிஸ்டுகளினதேயாகும். இவ்விடயம் குறித்து எம். எஸ். எம். அனஸ் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்;

"புரொட்டகோரஸ் ஸோபிஸ்டுகளின் முக்கிய தலைவராக விளங்கினார். இவரிடமிருந்துதான் ஸோபிஸ்டு இயக்கத்தின் "மனிதனே அனைத்திற்குமான அளவுகோல் என்ற பிரதானக் கொள்கை குரல் உலகிற்குக் கிடைத்தது. கோட்பாட்டின் பெறுமானத்தை இயற்கையில் மனிதனே தீர்மானிக்கின்றான் என்ற கொள்கையை அவர் வலியுறுத்தினார். வேறு வார்த்தைகளில் உண்மை அதன் தூய நிலையில் சார்புத்தன்மையானதும் அகவயத்தன்மையானதும் என்பதையும் அது நினைவூட்டியது. எது, ஒருவனுக்கு மெய்யானதாகவும் பொய்யானதாகவும் தெரிகின்றதோ அதுதான் உண்மையும் பொய்யுமாகும். எனது உண்மையுடன் எனது உண்மையை அளவீடு செய்வதற்கு எந்தக் கருவிகளும் கிடையாது. அவனே அவனுக்காக மேன்முறையீட்டு நீதிமன்றம் என்ற நிலைதான் உள்ளது" (அனஸ். எம். எஸ். எம்., *2006*; பக். *31 - 32).*

சோ∴பிஸவாதிகள் மனித மகிழ்ச்சிக்கொள்கைக்கு முக்கியத்தும் கொடுத்தனர் மனிதன் உலகில் சந்தோசமாக வாழவேண்டும், வாழும் சொற்ப காலத்திற்குள் உச்ச இன்பம் பெறுவதே அவனது இலட்சியம் என்றனர். இந்திய மெய்யியல் மரபோடு ஒப்பிடுகையில் அறிவுக்கோட்பாடு தன்னல மகிழ்ச்சிக்கொள்கைக்கு வழிவகுத்தது. அதாவது மனிதன் தன் சூழ்நிலைக்கும், மாறும் சமுதாயப் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப தொடர்புடையவன். நல்லவை, கெட்டவை என்பன மனிதனாலேயே உருவாக்கப்படுகின்றன. எதனை உணர்கின்றானோ அதுவே எனக்கு உண்மை இது எல்லோருக்குமான பொது அறிவு இவ்வாறான சிறப்புக் கருத்துக்களை ஜோர்ஜியாஸ் எழுதிய இன்மை அல்லது இயக்கம் என்ற நூல் பின்வருமாறு கூறுகிறது;

1. உள்ளது ஒன்றும் இல்லை
2. உள்ளது ஒன்று இருப்பினும் அதனை அறிய முடியாது.
3. அறிந்தாலும் அதை பிறருக்கு கூற முடியாது.

இவ்வாறான மெய்யியல் கருத்துகளின் மூலமே சோபிஸ்டுகள் தனிமனித அறிவிற்கும் சிந்தனைக்கும் முன்னுரிமை வழங்கி மனிதனை முதன்மைப்படுத்துகின்றனர்.

சோ∴பிஸ்டுகள் ஆரம்பித்து வைத்த மனித முன்னுரிமை வாதம் பிற்கால சோக்ரடீஸின் (கி.மு *469-399*) காலத்தில் உச்ச நிலையை அடைந்தது. தம்மைக் குறை கூறியவர்களுக்கு அவர் கூறிய பின்வரும் கூற்று அதனை நிருபிக்கின்றது. "எதேனியர்களே! (எதென்ஸ்) புறப்பொருள் சிந்தனைக்கும் எனக்கும் ஒரு தொடர்புமில்லை. இதுவே எளிய உண்மை. தன்னைத்தான் அறிந்து கொள்வதே மனிதனின் முதற்கடமை' என்றார். இதுவே உன்னையே நீ அறிவாய் (You Know Your Self) என்ற உலகப் பிரபல வாக்கியமாகியது. இது பிற்கால இஸ்லாமிய சூபிஸ மரபில் "தன்னை அறிந்தவனே தன் தலைவனை

அறிவான்'' என்ற விதத்தில் முன்வைக்கப்பட்டது. எவ்வாறாயினும் சோக்ரடிஸ் மனித நற்பண்புகளை ஆராய்வதில் முன்னுரிமை வழங்கினார். சட்டங்களும் சமுதாய வழக்காறுகளும் இருந்த போதிலும் தனித் தன்மையில் சிந்தித்துக் காண்கின்ற உரிமை மனிதனுக்குண்டு என அவர் கூறியது சோபிஸ சிந்தனைத் தாக்கத்தின் மூலமே என சிலர் வாதிடுகின்றனர். ஆனால் பிளேட்டோ, செனோபன் ஆகியோரின் கருத்து இதிலிந்து மாறுபடுகின்றது.

### 5.2 அறிவு பற்றிய கருத்துக்கள்

சோ.ஃ.பிஸ்டுகளின் இன்னொரு சிறப்பு அவர்கள் புலக்காட்சி மட்டுமே உண்மையானவை என்றனர் பிற்காலத்தில் இது முதன்மை மெய்யியலாளர்களினால் பேசப்பட்டாலும் சோ.ஃ.பிஸவாதிகளே இதன் ஆரம்பகர்த்தாக்கள். இவர்கள் மனிதன் புலக்காட்சி மூலம் பெறுவதே அறிவு என்றும் புலக்காட்சிக்கு அப்பாற்பட்ட எந்தவொன்றையும் அறிவின் கூறாக ஏற்க முடியாது என்றும், கூறினர். இவ்விடயம் குறித்து எம். எஸ். எம். அனஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்;

''புலனுணர்வும் உணர்ச்சிகளும் தனிப்பட்டது; அது எனக்கு உரியது. அதை ஏனையோருக்கு பகிரமுடியாது என புரொட்டகோரஸ் குறிப்பிட்டார். அவரது கருத்தில் புலணுனர்வு தொடர்பாடல் அற்றது ஆனால் பகுத்தறிவு தொடர்பாடலுக்குக் உட்பட்டது; பொதுமையானது'' (அனஸ். எம். எஸ். எம்., 2006; ப.32).

இவ்வாறான ஒரு கொள்கையினர் இந்திய மெய்யியலிலும் காணப்படுகின்றனர். அளவையியல் மற்றும் ஒழுக்கவியல் பண்புகளை முற்றாக மறுத்த சோ.ஃ.பிஸ்டுகள் குறிப்பாக அனுமானம் பற்றிய கருத்தை எதிர்த்தனர் இதற்காக ''உள்ளதை மட்டுமே உள்ளபடி நம்ப முடியும் மாறாக நேரிலோ, புலக்காட்சிக்கோ உட்படாத ஒன்றை ஏன் நம்ப வேண்டும்?'' என்ற கேள்வியின் அடிப்படையில் பௌதீக அதீக நம்பிக்கைகளையும் நிராகரிக்கின்றனர். ஹியூமின் ஐயுறுவாதம் எவ்வாறு காண்டின் விழிப்பிற்கு காரணமானதோ அவ்வாறே சோ.ஃ.பிஸ்டுகள் சோக்ரடிஸிற்கும் பிளேட்டோவிற்கும் விழிப்பூட்டினர்.

புலக்காட்சிக்கு இவர்கள் முன்னுரிமை கொடுத்ததனால் மனிதனையும், விலங்குகளையும் சரி சமமாகவே கொண்டு நடத்தினர். இக்கொள்கை பிற்காலத்தில் பல விமர்சனங்களை எதிர்கொண்டாலும் அவர்கள் வாழ்ந்த காலத்திலிருந்த ஏனைய கொள்கையிலிருந்து வித்தியாசமான சிறப்புக்களை வழங்கியது எனலாம்.

சோ.ஃ.பிஸவாதிகள் அறிவின் புற நிலைத்தன்மையை ஏற்கவில்லை. மனிதன் அகநிலை சார் அறிவினை கொண்டிருக்கின்றான் என்கின்றனர். மெய்யியல் அறிவுவழிப் பாரம்பரியத்தில் இவர்கள் ஏற்படுத்திய தாக்கம், புற நிலை அறிவு பற்றி பல கேள்விகளை எழுப்பியமையினாலாகும். இவ்விடயத்தினை சோ. கிருஸ்ணராஜா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்;

''ஜியோர்ஜியஸ் (Georgias) என்பவர் உள்பொருள் என்று சொல்லக் கூடியதொன்றுமில்லை என்றும், அவ்வாறில்லாது எள்பொருளென ஒன்று இருந்தாலும் அதனை அறிய முடியாது என்றும், மேலும் அப்பொருளை அறிய முடிந்தாலும், அவ்வாறு அறிந்ததைப் பிறருக்குத் தெரியப்படுத்த முடியாதென்றும் உரைத்தார்'' (கிருஸ்ணராஜா, சோ., 2018; ப.4).

மேலும், இவர்களது கேள்விகள் இவர்களுக்கு முன்னர் காணப்பட்ட மனித அறிவு சார் நிலையினின்றும் வித்தியாசமான ஓர் நிலையினை மெய்யியல் வரலாற்றில் ஏற்படுத்தியது. இதனாலேயே இவர்களின் பின்னால் அக்கால இளைஞர்கள் அணி திரண்டனர். பேச்சு வன்மையும் வாதத் திறமையும் அறிவின் அனைத்து துறைகளிலும் விழிப்புணர்வையும் உண்டு பண்ணியது. தமது சிறப்புத்துறையான கற்பித்தல் துறையின் முக்கியத்துவத்திற்கேற்ப புதிய விடயங்களில் கேள்விகளையும், வாதங்களையும் முன்வைத்தனர். இதுவே பின்வந்த மெய்யியல் வரலாற்றில் புதிய அறிவு சார் கொள்கைகள் தோன்ற வாய்ப்பாக அமைந்தது.

அறிவைப் போதித்த இவர்கள் அதனைப் பணத்திற்கு விற்கவும் முன்வந்தனர். உண்மையைக் கண்டடைவதற்காக நெறிப்படுத்தப்பட்ட ஆற்றலுள்ள பேச்சுக்கலை நிச்சயம் பயனுள்ளதாக இருக்க முடியும். ஆனால், அதை ஒரு கருவியாகப் பயன்படுத்தித் தவறான கருத்துக்களையும் பலவீனமான வாதங்களையும் உண்மை என வாதாடும் ஒரு போக்கு வளர்ச்சி பெற்றது; சோ.ஃ.பிஸ்டுகள் இதற்கு வழிவகுத்தனர். சோ.ஃ.பிஸ்டுகளிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் இவ்வாறு செயல்பட முன்வந்தனர். இக்கலையைக் கற்றுக்கொள்வதில் இளைஞர் அதிகம் ஆர்வம் காட்டினர். இது சமூகத்தில் பல பிரச்சினைகளுக்கும் குழப்பங்களுக்கும் வழிகோலியது.

கௌரவமிக்க செல்வாக்குள்ள குடும்பங்களில் இருந்து வந்த இளைஞர்களுக்கே சோ.ஃ.பிஸ்டுகள் தமது கல்விப் பயிற்சியை வழங்கினர். தமது பாரம்பரிய சமய மரபுகள், வழக்காறுகள் ஒழுக்க கண்ணோக்குகள் என்பனவற்றினை இளைஞர்கள் விமர்சிக்கத் தொடங்கினர்.

இவர்களது போதனைகளை அநேகர் கற்க முன்வந்தமையினால் கல்வியானது தனிப்பட்டவர்கள் தரும் கட்டணங்களுக்கேற்ப போதனை முறையாக மாறியது. "பிரத்தியேக செயல் திறனையும், உயர்ந்த மன வளத்தையும் யார் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்களோ அவர்களிடமிருந்து பணம் பெறப்பட்டது". இது சோ.ஃ.பிஸ்டுகளின் தனித்தன்மையானாலும் இதனால் ஏழை மக்கள் பாதிப்படைந்தனர். இம்முறையினை இல்லாமல் செய்யவே சோக்ரடிஸ் இளைஞர்களுக்கும் பொது மக்களுக்கும் தேடிச்சென்று இலவச அறிவுரைகளை வழங்கினர். இவ்வாறு மக்களின் காலடியில் நல்லறிவும் அரசியல் வாதத்திறமையும் சென்றடைய சோ.ஃ.பிஸ்டுகளின் செயற்பாடு அடிப்படைத்தாக்கம் செலுத்தியது.

புரொடகோரஸ் (கி.மு 480-410) ஜோர்ஜியாஸ் (கி.மு 483-375) போன்றோர் தம் அறிவு பற்றிய கருத்துக்களை முன்வைக்கும் போது அறிவின் வரையறை பற்றிப் பேசுகின்றனர். 'உள்ளது உண்மை அறிவின் பாற்பட்டது' போன்ற அறிவியல் உயர் தளங்கள் மறுக்கப்பட்டன. இதன்படி சோபிஸ அறிவாராய்ச்சியியல்

i. அறிவின் வரையறை

ii. அறிவின் இயலாமை

என்பன தொடர்பான சிந்தனையாக அமைகிறது. அறிவைப்பெறுதல் அதனைக் கற்பித்தல் உள்ளதை மட்டுமே உள்ளபடி நம்புதல், பௌதீக அதீத மறுப்பு என்பன இதனை அடிப்படையாகக் கொண்டே போதிக்கப்பட்டன.

### 5.3 ஒழுக்கம் பற்றிய சோ.ஃ.பிஸ்டுகளின் பார்வை

அறிவாளிகள் எனத் தங்களை கூறிக்கொண்ட சோ.ஃ.பிஸ்டுகள் ஒழுக்கவியல் தொடர்பான விடையங்களில் மிகவும் பின் தங்கியே காணப்பட்டனர். கடவுள் பற்றிய நம்பிக்கை மற்றும் அறிவிலிருந்து முற்றிலும் விடுபட்டவர்களாகவும் அத்தகைய அறிவு மனித மனம் ஏற்படுத்திய கற்பனைக் கதை என்றும் நல்லதும் கெட்டதும் மனித உருவாக்கமேயின்றி வேறெதுவுமில்லை. இன்னும் இவ்வுலகில் மனிதன் குறுகிய காலமே வாழ இருக்கின்றான். அதனால் இவ்வுலகில்தான் உண்மையும், இன்பமும் உண்டு வேறு எவ்வுலகிலும் அவை இல்லை எனவும் கருதினர். இதனாலேயே இவர்களை மெய்யியல் வரலாறு இன்பவாதிகள் என அழைக்கின்றது. இவர்களது பிரதான சிந்தனை பகுத்தறிவு வாதத்திற்கு உட்பட்டிருந்தது. முன்னைய விஞ்ஞான ரீதியான அறிவு முறைகளையும் கோட்பாட்டு விளக்கங்களையும், பிரபஞ்சவியல் விளக்கங்களையும் இவர்கள் முழுமையாக ஏற்கவில்லை.

இன்னும் அனைத்து மாற்றங்களுக்கும் உட்படுகின்றன, மாற்றத்திற்குட்படாத எதுவும் இல்லை என்றனர். இதுவும் சோ.ஃ.பிஸவாதத்தின் தனிச்சிறப்புக் கொள்கையாகும். இன்னும் பௌதீக அதீதம் சார்ந்த கருத்துக்களை ஐயுறவுக்குட்படுத்தி வினாக்களை எழுப்பி நடு நிலமையாக ஆராய்ந்து முடிவெடுக்கும் கிரேக்க காரண சிந்தனை மரபு சோ.ஃ.பிஸ்டுகளின் செயற்பாடுகளிலும் காணப்படுவதை அவதானிக்கலாம். அரசியல் பின்னணியில் நோக்குவதானால் சோ.ஃ.பிஸ்டுகள் அனைவரும் ஒருமுகமான மெய்யியல்,

அரசியல் மற்றும் சட்டவியல் கோட்பாடுகளை வழங்கியவர்கள் அல்ல. முக்கியமாக புரட்டோகோரஸ், ஜோர்ஜியாஸ், பரோடிக்கஸ், ஹிப்பியாஸ், என்டிபோன் ஆகியோர் முந்திய சோபிஸ்ட்டுகள் வரிசையைச் சேர்ந்தவர்கள். திரேஸி மார்க்கஸ், காளிசெல்ஸ், லைக்கோ போன், போன்றவர்கள் பிந்திய சோபிஸ்டுகள். அதிகமான முன்னைய சோ∴பிஸ்டுகள் ஜனநாயக மரபுகளை அனுசரித்தவர்கள். அதே வேளை பிந்திய சோபிஸ்ட்டுகள் ஜனநாயகத்தை விட பிரபுத்துவ ஆட்சி, சில்லோராட்சி என்பவற்றில் அதிக அக்கறை காட்டியவர்கள்.

## 6. முடிவுரை

கிரேக்கத்தின் சிந்தனைச் செழுமையினைப் புதியகோணத்தில் வரையறுத்து அக்காலத்தில் புகழ் வாய்ந்தவாறான அறிவாராய்ச்சியை மேற்கொண்ட சோ∴பிஸ்டுகள் பிற்காலத்தின் சிந்தனை வளர்ச்சிக்கும் பங்களிப்பாற்றியுள்ளமையினை மேற்கருத்துக்களில் தெளிவாக இனங்காண முடிகின்றது. அத்துடன், மெய்யியல் பாரம்பரியத்திலே மனிதனை மையப்படுத்தி மனிதவாழ்வு பற்றிய ஆராய்ச்சிகளை ஆரம்பித்து, இன்றுவரை மனிதனை மையப்படுத்தியவகையிலே அனைத்துத் துறைகளும் வளர்ச்சி பெறவும் சோ∴பிஸ்டுகளே காரணகர்த்தாக்கள் ஆவர். பல்வேறு சிறப்புக்களை இவர்கள் கொண்டிருந்தாலும் இவர்களது தனி மனித சார்பு அறிவு ஏற்புவாதம், அகநிலை சார் அறிவு விளக்கம் என்பன சில தவறான கற்பிதங்களுக்கும் வழி காட்டல்களுக்கும் மனித சமூகத்தை இட்டு செல்வதாக பின்வந்தோர் விமர்சிக்கின்றனர். ஆழ்ந்த ஞானம் உண்மை அறிவு ஒழுக்கம் என்பவற்றில் மௌனம் மற்றும் சந்தேகம் கொண்டிருந்த சோ∴பிஸ்டுகளின் போக்கு அறிவுப்பாரம்பரியத்தில் சிந்தனைக் குலைவை ஏற்படுத்திக்கொண்டிருந்த வேளையில்தான் சோக்கிரடிஸ் தோன்றினார். சோ∴பிஸ்டுகளின் அறமற்ற அரசியல் உபதேசம் மற்றும் கல்வியின் பயன் அரசியல் துறையின் வெற்றி மட்டுமல்ல கல்வியின் பயன் வாழ்வின் முழு நிறைவு. இந்நிலைக்கு ஒழுக்கமும் அறமும் அவசியமானவை என சோ∴பிஸ்டுகளுக்கு எதிரான வாதத்தினை சோக்கிரடிஸ் முன்வைத்தார்.

சோக்கிரடிஸின் காலத்திலிருந்து மனித ஒழுக்க விழுமியம் சார் மெய்யியல் பாரம்பரியம் ஆரம்பித்தாலும் தமக்கு முற்பட்ட கால புரண இதிகாச நம்பிக்கைகளிலிருந்து உலகின் பிரதான படைப்பான மனிதனை நோக்கித் திருப்பினர். அத்துடன், அவனது உணர்வுகளுக்கும் தனித்தன்மைக்கும் முன்னுரிமை அளித்து புலன் சார் அறிவை முதன்மைப்படுத்தினர், மனிதனை மையப்படுத்திய கல்விப் பாரம்பரியத்தினைக் கட்டியெழுப்பினர் போன்ற கருதுகோள்கள் இவ் ஆய்வில் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மேலும், உலக அறிவு போதனை மரபில் முழுமையான சொற்களை உருவாக்குதல் வசனங்களின் அமைப்பு வாக்கியம் அமைத்தல் போன்ற கல்வியல்சார் கொள்கைகளிலும் சிறப்பிடம் பெறுகின்ற பெருமை சோ∴பிஸவாதிகளுக்கே உரியது.

## உசாத்துணைகள்

Cornford, F. M, (1932). *Before and after Socrates*. UK: Board of Extra - Mural Studies at Cambridge.

Livingstone, R.W. (1939). *Portrait of Socrates,* Oxford: Clarendon Press.

Nersesyants V.S. (1986). *Political thought of Ancient Greece*. Moscow: Progress Publishers.

Stumpf, S.E. (1994). *Philosophy: History and problems*. New York: Mcgraw-Hill College.

கிருஸ்ணராஜா, சோ. (2018). *ஐரோப்பிய மெய்யியல் வரலாறு*. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

அனஸ். எம்.எஸ்.எம். (2006). *மெய்யியல் - கிரேக்கம் முதல் தற்காலம் வரை*. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

பேணற்று, யோ. (1965). *ஆதி கிரேக்க மெய்யியல்*. கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்.

முத்துமோகன், ந. (2000). *ஐரோப்பியத் தத்துவங்கள்*. பெங்களுர்: லக்ஷ்மி சுந்தரம்.

சவேரியர் குருத்துவக் கல்லூரி (2005). *மெய்யியல் நோக்கு யூபிலி சிறப்பிதழ்*. கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்: சவேரியர் குருத்துவக் கல்லூரி.